செய்தி வெளியீடு எண். 1 /2018 நாள் 04.01.2018

**சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்**
**கோடையில் குடிநீர் பஞ்சம் ஏற்பட வாய்ப்பில்லை –பொதுமக்கள் அஞ்ச வேண்டாம்.**

---

இந்த ஆண்டின் வடகிழக்குப் பருவமழையில் சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் பாதியளவு நீரே இருப்பு உள்ளதால் கோடையில் சென்னை மக்களின் குடிநீருக்கு பஞ்சம் ஏற்பட்டு விடும் என இப்போதே சில வதந்திகள் பரப்பப்பட்டு மக்களிடையே தேவையற்ற ஒரு அச்சத்தை ஏற்படுத்தி வருவதாக சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

2017ம் ஆண்டு கோடையில் ஏரிகள் அனைத்தும் வறண்டு நீர் இருப்பு முற்றிலும் இல்லாத நிலை இருந்தது. ஆனால், அண்மையில் பெய்த வடகிழக்குப் பருவமழையால் சென்னைக்கு குடிநீர் வழங்கக்கூடிய ஏரிகளில் 5.5 டி.எம்.சி நீர் இருப்பிலுள்ளது.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் வீராணம் ஏரியும் வடகிழக்கு பருவமழையால் நிரம்பியுள்ளது. மேலும், சென்னையில் அனைத்து மண்டலங்களிலும் நிலத்தடி நீர் மட்டம் கடந்த ஆண்டை விட கணிசமாக உயர்ந்திருக்கிது.

நெம்மேலி மற்றும் மீஞ்சூர் ஆகிய இரண்டு கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மூலம் தினசரி 200 மில்லியன் லிட்டர் நீரை பெற்று வருகிறோம்.

தற்போது சென்னையில் நாளொன்றுக்கு 650 மில்லியன் லிட்டர் அளவில் விநியோகிக்கப்படும் குடிநீரானது, வீராணம் ஏரியிலிருந்து 170 மில்லியன் லிட்டரும் கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் மூலம் 200 மில்லியன் லிட்டரும் மீதம் 280 மில்லியன் லிட்டர் நீர் நான்கு ஏரிகளிலிருந்தும் பெறப்படுகிறது.

மேலும், தெலுங்கு கங்கை திட்டத்தின் கீழ் ஆந்திராவிலிருந்து நீரைப் பெறுவதற்காக ஆந்திர மாநில அரசிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு தற்போது அந்த நீரும் பூண்டி ஏரிக்கு வர ஆரம்பித்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் சென்னைக் குடிநீர் வாரியம் தற்போது சென்னை மாநகர மக்களுக்கு வழங்கி வரும் 650 மில்லியன் லிட்டர் குடிநீர் அக்டோபர் 2018 வரை தொடர்ந்து வழங்கப்படும் என உறுதியளிக்கிறது. எனவே நிலைமை இவ்வாறிருக்க கோடையில் குடிநீர் பஞ்சம் ஏற்படும் என்ற தவறான வதந்திகளால் மக்கள் எந்தவித அச்சமும் அடையத் தேவையில்லை என சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்